ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு’தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ இன்னுயிர்ச்சேவல் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ இன்னுயிர்ச்சேவல் ॥

எம்பெருமானை நினைவூட்டும் பொருள்களால் தலைவி தளர்ந்தமை கூறுதல்

‡ இன்னுயிர்ச் சேவலும் நீரும் கூவிக்கொண்டு⋆ இங்கெத்தனை⋆
என்னுயிர் நோவ மிழற்றேன்மின்⋆ குயில் பேடைகாள்⋆
என்னுயிர்க் கண்ண பிரானை⋆ நீர் வரக் கூவுகிலீர்⋆
என்னுயிர் கூவிக் கொடுப்பார்க்கும்⋆ இத்தனை வேண்டுமோ (1)

இத்தனை வேண்டுவதன்றந்தோ!⋆ அன்றில் பேடைகாள்⋆
எத்தனை நீரும் நும் சேவலும்⋆ கரைந்தேங்குதிர்⋆
வித்தகன் கோவிந்தன்⋆ மெய்யன் அல்லன் ஒருவர்க்கும்⋆
அத்தனையாம் இனி⋆ என் உயிர் அவன் கையதே (2)

அவன் கையதே எனதாருயிர்⋆ அன்றில் பேடைகாள்⋆
எவம் சொல்லி நீர் குடைந்தாடுதிர்⋆ புடை சூழவே⋆
தவம் செய்தில்லா⋆ வினையாட்டியேன் உயிர் இங்குண்டோ⋆
எவம் சொல்லி நிற்றும்⋆ நும் ஏங்கு கூக்குரல் கேட்டுமே (3)

கூக்குரல் கேட்டும்⋆ நம் கண்ணன் மாயன் வெளிப்படான்⋆
மேற்கிளை கொள்ளேன்மின்⋆ நீரும் நும் சேவலும் கோழிகாள்⋆
வாக்கும் மனமும் கருமமும்⋆ நமக்காங்கதே⋆
ஆக்கையும் ஆவியும்⋆ அந்தரம் நின்றுழலுமே (4)

அந்தரம் நின்றுழல்கின்ற⋆ யானுடைப் பூவைகாள்⋆
நுந் திரத்தேதும் இடையில்லை⋆ குழறேன்மினோ⋆
இந்திர ஞாலங்கள் காட்டி⋆ இவ்வேழுலகும் கொண்ட⋆
நம் திரு மார்பன்⋆ நம்மாவி உண்ண நன்கெண்ணினான் (5)

நன்கெண்ணி நான் வளர்த்த⋆ சிறு கிளிப் பைதலே⋆
இன் குரல் நீ மிழற்றேல்⋆ என்னாருயிர்க் காகுத்தன்⋆

www.prapatti.com

நின் செய்ய வாயொக்கும் வாயன்⋆ கண்ணன் கை காலினன்⋆
நின் பசும் சாம நிறத்தன்⋆ கூட்டுண்டு நீங்கினான் (6)

கூட்டுண்டு நீங்கிய⋆ கோலத் தாமரை கண் செவ்வாய்⋆
வாட்டம் இலென் கரு மாணிக்கம்⋆ கண்ணன் மாயன் போல்⋆
கோட்டிய வில்லொடு⋆ மின்னு மேகக் குழாங்கள்காள்⋆
காட்டேன்மின் நும்முரு⋆ என்னுயிர்க்கது காலனே (7)

உயிர்க்கது காலன் என்று⋆ உம்மை யான் இரந்தேற்கு⋆ நீர்
குயில் பைதல்காள்⋆ கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர்⋆
தயிர்ப் பழஞ்சோற்றொடு⋆ பால் அடிசிலும் தந்து⋆ சொல்
பயிற்றிய நல் வளம் ஊட்டினீர்⋆ பண்புடையீரே! (8)

பண்புடை வண்டொடு தும்பிகாள்⋆ பண் மிழற்றேன்மின்⋆
புண் புரை வேல் கொடு⋆ குத்தால் ஒக்கும் நும் இன் குரல்
தண் பெரு நீர்த் தடம் தாமரை⋆ மலர்ந்தால் ஒக்கும்
கண் பெரும் கண்ணன்⋆ நம்மாவியுண்டெழ நண்ணினான் (9)

எழ நண்ணி நாமும்⋆ நம் வான நாடனோடொன்றினோம்⋆
பழன நன்னாரைக் குழாங்கள்காள்⋆ பயின்றென்னினி⋆
இழை நல்லவாக்கையும்⋆ பையவே புயக்கற்றது⋆
தழை நல்ல இன்பம் தலைப்பெய்து⋆ எங்கும் தழைக்கவே (10)

‡ இன்பம் தலைப்பெய்தெங்கும் தழைத்த⋆ பல்லூழிக்குத்⋆
தண் புகழ் ஏத்தத்⋆ தனக்கருள் செய்த மாயனைத்⋆
தென் குருகூர்ச் சடகோபன்⋆ சொல்லாயிரத்துள் இவை⋆
ஒன்பதோடொன்றுக்கும்⋆ மூவுலகும் உருகுமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com